**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 85 of 2026**

**Prosecution Witness : PW1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: ராமன்** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused Present)**

**Dated. 08.06.2026**

**முதல் விசாரணை**

நான் திருவெறும்பூர் மது அமலாக்கப்பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.01.2026 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் தனலெட்சுமிடன் நானும், தலைமை காவலர் 1240 சண்முகசுந்தரம் ஆகியோருடன் மதுவேட்டை ரோந்து அலுவலாக புறப்பட்டு இலால்குடி உட்கோட்ட சரக பகுதியில் கண்காணித்த போது பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட பிரேம்குமார் த/பெ. சின்னதுரை, முத்தியூர், திருமணமேடு, இலால்குடி தாலுக்கா என்பவர் அவரது வீட்டின் அருகில் அரசு அனுமதியின்றி 180 ml அளவுடைய Old Chef பிராந்தி 26 பாட்டில்கள் வைத்திருந்தவர், எங்களை பார்த்ததும் ஓட முயற்சி செய்தவரை பிடித்து சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரித்தபோது, அவர் மதுபானத்தை அரசு அனுமதியின்றி சில்லறை விற்பனைக்காக வைத்திருப்பதாக ஒப்புக் கொண்டார். அவரை சிறப்பு உதவி ஆய்வாளர் காலை 08.30 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்தார். பொதுமக்கள் யாரும் சாட்சியாக முன்வராததால் எங்கள் முன்னிலையில் 180 ml அளவுடைய Old Chef பிராந்தி 26 பாட்டில்களை

காலை 08.45 மணியளவில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், சண்முகசுந்தரம் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். பின்பு சம்பவ இடத்திலேயே கைப்பற்றப்பட்ட 180 ml அளவுடைய Old Chef பிராந்தி 26 பாட்டில்களை அழித்தல் மகஜர் தயார் செய்து எங்கள் முன்னிலையில் சிறப்பு உதவி ஆய்வாளர் காலை 09.00 மணியளவில் 26 மதுபான பாட்டில்களை கொட்டி அழித்தார். பின்பு எதிரியுடன் காலை 10.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 32/2026 U/s. 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த அழித்தல் மகஜரில் நானும், சண்முகசுந்தரம் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து **அ.சா.ஆ.1/அ.சா.1** ஆகும். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.2/அ.சா.1** ஆகும். அழித்தல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து **அ.சா.ஆ.3/அ.சா.1** ஆகும். அந்த அழித்தல் மகஜர் **அ.சா.ஆ.4/அ.சா.1** ஆகும். சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

முதல் தகவல் அறிக்கை எத்தனை மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் 10.30 மணிக்கு பதிவு செய்யப்பட்டது. கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜர் இரண்டிலும் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் எத்தனை மணிக்கு கையொப்பம் செய்தேன் என்றால் காலை 08.45 மணிக்கு கையொப்பம் செய்தேன். கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜர் கையால் எழுதப்பட்டிருந்ததா என்றால் இல்லை, தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல்

நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றாலும், இந்த வழக்கு புள்ளியியல் கணக்கிற்காக எதிரி மீது போடப்பட்ட பொய்யான வழக்கு என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.08 15:27:23 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 85 of 2026**

**Prosecution Witness : PW2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **:** சண்முகசுந்தரம் | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused Present)**

**Dated. 08.06.2026**

**முதல் விசாரணை**

நான் திருவெறும்பூர் மது அமலாக்கப்பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.01.2026 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் தனலெட்சுமிடன் நானும், தலைமை காவலர் 501 ராமன் ஆகியோருடன் மதுவேட்டை ரோந்து அலுவலாக புறப்பட்டு இலால்குடி உட்கோட்ட சரக பகுதியில் கண்காணித்த போது பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட பிரேம்குமார் த/பெ. சின்னதுரை, முத்தியூர், திருமணமேடு, இலால்குடி தாலுக்கா என்பவர் அவரது வீட்டின் அருகில் அரசு அனுமதியின்றி 180 ml அளவுடைய Old Chef பிராந்தி 26 பாட்டில்கள் வைத்திருந்தவர், எங்களை பார்த்ததும் ஓட முயற்சி செய்தவரை பிடித்து சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரித்தபோது, அவர் மதுபானத்தை அரசு அனுமதியின்றி சில்லறை விற்பனைக்காக வைத்திருப்பதாக ஒப்புக் கொண்டார். அவரை சிறப்பு உதவி ஆய்வாளர் காலை 08.30 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்தார். பொதுமக்கள் யாரும் சாட்சியாக முன்வராததால் எங்கள் முன்னிலையில் 180 ml அளவுடைய Old Chef பிராந்தி 26 பாட்டில்களை

காலை 08.45 மணியளவில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், தலைமை காவலர் 501 ராமன் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். பின்பு சம்பவ இடத்திலேயே கைப்பற்றப்பட்ட 180 ml அளவுடைய Old Chef பிராந்தி 26 பாட்டில்களை அழித்தல் மகஜர் தயார் செய்து எங்கள் முன்னிலையில் சிறப்பு உதவி ஆய்வாளர் காலை 09.00 மணியளவில் 26 மதுபான பாட்டில்களை கொட்டி அழித்தார். அந்த அழித்தல் மகஜரில் நானும், தலைமை காவலர் 501 ராமன் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். அந்த அழித்தல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். பின்பு எதிரியுடன் காலை 10.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 32/2026 U/s. 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து **அ.சா.ஆ.5/அ.சா.2** ஆகும். அழித்தல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து **அ.சா.ஆ.6/அ.சா.2** ஆகும். சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

முதல் தகவல் அறிக்கை எத்தனை மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் 10.30 மணிக்கு பதிவு செய்யப்பட்டது. கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜர் இரண்டிலும் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் எத்தனை மணிக்கு கையொப்பம் செய்தேன் என்றால் காலை 08.45 மணிக்கு கையொப்பம் செய்தேன். கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜர் கையால் எழுதப்பட்டிருந்ததா என்றால் இல்லை, தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றாலும், இந்த

வழக்கு புள்ளியியல் கணக்கிற்காக எதிரி மீது போடப்பட்ட பொய்யான வழக்கு என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.08 15:27:29 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி